# பத்துலகை உருவாக்க வரும் பேரரசர்


பத்துலகை உருவாக்க வரும் பேரரசர்

**Dr . P V Jesudas**

ஒரு பெரியவர் ஒரு வாலிபனிடத்தில் : மகனே, இந்த உலகத்தில் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். அதற்கு அந்த வாலிபன் : பெரியவரே நான் இந்த உலகத்தில் வாழவிரும்புகிறேன் என்றான். இந்த பதில் இன்றைக்கு எவ்வளவு உண்மையாக இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இந்த உலகத்தில் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் எந்தவிதமான தொல்லைகளும் இல்லாமல் வாழவேண்டும் என்று விசேஷமாக நினைக்கின்றோம். ஆனால் நமக்கு முன்பாக இருக்கிற இந்த உலகம் எப்படிப்பட்டது என்று ஆராயவேண்டும் . இன்றைக்கு எல்லா நாடுகளும் யுத்தத்திற்கு ஆயத்தப்படுத்திகொண்டிருக்கின்றன. எல்லா நாடுகள் மத்தியிலும் அதிக யுத்த ஆயுதங்கள் தயார் செய்து வைத்திருக்கின்றன. மற்ற நாடுகள் யுத்தம் செய்தால் என்னாவது என்று சொல்லி தங்களை பாதுகாத்துகொள்ள அணு ஆயுதங்களை தயார் செய்து வைத்திருக்கின்றனர். நரசிம்மராவ் கன்னடாவில் பேசும்போது 130 முறை இந்த உலகத்தை அழிக்கத்தக்கதாக இந்த உலகத்தினர் அணு ஆயுதங்களை தயார் செய்து வைத்திருக்கின்றனர். இப்படியிருக்க யாராவது ஒருவர் போபப்பட்டு ஒரு அணு ஆயுதத்தை உபயோகப்படுத்தினார்கள் என்றால் இந்த உலகத்தின் நிலமை என்னவாகும்? இந்த உலகம் ஒரு பயங்கரமான வழியிலே போய்கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் தீமைகள் பெருகிக் கொண்டேபோகிறது. வேதம் சொல்லுவதுபோல எங்கு பார்த்தாலும் தேவ ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படுகிறார். இதனால் மக்களிடையே அன்பு இரக்கம் இல்லாமல் போகிறது. எந்தவிதமான பொல்லாப்பையும் தைரியமாய் செய்யகூடிய குணம் மக்களிடையே காணப்படுகிறது. இந்த பூமிக்கு மேலே 32 கிலோ மீட்டர் வரைக்கும் வானத்திலே ஆண்டவர் பாதுக்காப்பான வாய்வு மண்டலத்தை வைத்திருக்கிறார். மற்ற கிரகங்களிலிருந்து வருகிற கொடிய விஷ கதிர்களை இந்த வாய்வு மண்டலம் பூமிக்கு வரவிடாதபடி தடுத்துவிடுகிறது. அது இப்பொழுது பெட்ரோல் அதிகமாக உபயோகப்படுத்துவதினாலும் மற்ற எரிவாய் பொருள்களினாலும் அந்த வாய்வு மண்டலத்தில் அதிக ஓட்டைகள் விழுந்து விட்டது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். அதனால் மற்ற கிரகங்களிலிருந்து வரகூடிய விஷ கதிர்கள் நேரடியாக எந்த தடுப்பும் இல்லாமல் இந்த பூமிக்கு வருகிறது. அப்படி வருவதினால் மனிதர்களுக்கு தோல் கேன்ஸர் வருகிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். அந்த தோல் கேன்ஸர் ஒரு மனிதனுக்கு வந்தால் அவனுக்கு தோளில் எரிச்சலும் அரிப்பும் வருகிறது. இந்த விதமான வியாதிகள் இனிமேல் ஏராளமாக வரும் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள். இந்த கதிர்கள் பூமிக்கு வரும்போது விளைச்சல்களை அதிகமாக பாதிக்கிறது. இப்படியாக இந்த உலகத்தின் நிலைமை



போய்கொண்டிருக்கிறது. இப்படி இருக்கும் இந்த சூழ்நிலையில் நாம் இந்த பூமியில் வாழமுடியுமா ? ஆண்டவர் இந்த உலகத்தை எப்படியெல்லாம் அழகாக சிருஷ்டித்தார். ஆனால் மனிதர்கள் இந்த உலகத்தை சின்னபின்னமாக ஆக்கி இந்த உலகத்தை கெடுத்து தீய சக்திகளை அதிகமாக வளரவிட்டு பாழ்ப்படுத்திவிட்டார்கள்.



ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது; மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம்வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுது கொண்டார்கள். -வெளி 11 . 18

**இந்த உலகத்தின் கொடுமைக்கும் கேட்டுக்கும் காரணமாயிருப்பவன் சாத்தான். இந்த பூமியை முற்றிலுமாக மாற்றி சீர்கெட வைத்தவன் சாத்தான். அவனுக்கு பூமியின் நியாயத்தீர்ப்பு இன்னும் கொஞ்சகாலம் தான் என்று அறிந்து இன்னும் பூமியை மோசம்பண்ணுகிறான்.** ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரமுண் டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன். வெளி 12. 12

**சாத்தானுக்கு இந்த உலகம் அதிக காலம் நீடிக்காது என்று தெரிந்துவிட்டது. இந்த உலகத்தினுடைய முடிவும் சாத்தானின் முடிவும் ஒன்றாயிருக்கும் என்றும் அவனுக்கு தெரியும். அதனால் அவன் மிகுந்த கோபம் கொண்டு அவனோடுகூட எத்தனை பேர்களை அழித்துவிடவேண்டுமோ அத்தனை பேரையும் அவன் அழிப்பான். அவனோடுகூட இருக்கும் பொல்லாத தேவதுாதர்கள் அதிக போபத்தோடும் ஆவேசத்தோடும் மக்களை பொல்லாத**

வழிகளில் நடத்தி அழிப்பார்கள். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப்பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம். - லூக்கா 21.26 இருதய சம்பத்தப்பட்ட ஏராளமான வியாதிகளும் மனக்கஷ்டங்களும் மனிதனுக்கு வரகூடிய தன்மையுடையதாக இருக்கும். எப்படியாவது

2

வேறு கிரகங்களுக்கு போய்விடலாம் என்று எண்ணி பெரிய ராக்கெட்டுகளை ஏற்ப்படுத்தி சாத்தான் மற்ற உலகங்களுக்கு சென்றுவிடலாம் என்று எண்ணுகிறான். அவன் செய்யும் இந்த காரியங்களே ஆண்டவர் வருகிறதற்கு இன்னும் கொஞ்ச காலம் தான் இருக்கிறது என்று தெரிகிறது. இனி என்ன நடக்கபோகிறது என்ற ஒரு பெரிய கேள்வி நம் உள்ளத்தில் நமக்கு எழும்புகிறது. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; - யோவான் 14. 1, 2, 3




கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஒரு விசேஷமான ஒரு வாக்குத்தத்தை ஆண்டவர் நமக்கு கொடுத்திருக்கிறார். இந்த உலகம் முற்றிலுமாக அழிக்கப்படபோகிறது. எந்தவொரு கவலையும் சஞ்சலமும் இல்லாமல் நாம் ஆண்டவரிடம் விசுவாசம் வைக்க வேண்டும். நமக்கு தேவை விசுவாசம். பயங்கரமான காரியங்கள் நடக்கபோகிறது. அவர் மீது விசுவாசம் வைத்தால் நமக்கு பலத்த பாதுக்காப்பு கொடுக்கிறார். முடிவு பரியந்தம் நான் உங்களோடிருப்பேன் என்று ஆண்டவர் வாக்கு கொடுத்திருக்கிறார். இந்த பூமியை அழித்து புதிய பூமியை நமக்கு கொடுக்கபோகிறார். இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை. - ஏசாயா 65.17 ஆண்டவர் சொன்ன அநேக காரியங்கள் நடந்துவிட்டது. இனி நடக்க போகும் காரியங்களையும் நாம் விசுவாசிப்போம். இயேசு கிறிஸ்து இரண்டாவது முறை வருவார் என்று நம்முடைய வேதத்தில் 1518 தடவை எழுதப்பட்டிருக்கிறது. வேதத்தில் புதிய ஏற்பாட்டிலே 260 அதிகாரங்கள் இருக்கிறது. அதில் 318 முறை 25 வசனத்திற்கு ஒரு முறை ஆண்டவருடைய இரண்டாம் வருகையை

3

குறித்து எழுதப்பட்டிருக்கிறது. ஆண்டவருடைய இரண்டாம் வருகை இந்த உலகத்தில் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு பெரிய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கயிருக்கிறது. அதற்காக நாம் அவரின் கட்டளைகளை கடைபிடித்து ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கவேண்டும். ஆதாம் ஏவாள் பாவம் செய்தபோதே தமது இரண்டாம் வருகையை குறித்து ஒரு விசேஷமான வாக்குத்தத்தை கொடுத்தார். உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். ஆதி 3. 15





இந்த பாவத்தை உண்டுப்பண்ணின அந்த பாம்பாகிய பிசாசின் தலையை நசுக்க நான் வருவேன் என்று ஆண்டவர் ஏதேன் தோட்டத்திலேயே சொல்லிவிட்டார். அடுத்து ஏனோக்கும் ஆண்டவருடைய வருகையை குறித்து சொல்லியிருக்கிறார். ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.-யூதா 14, 15



4

**இந்த ஆண்டவருடைய வருகையை குறித்து சொன்ன தீர்க்கதரிசன வசனங்கள் எல்லா காலங்களிலும் கொடுக்கப்பட்டு வந்தது.** விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான். விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான் - எபிரேயர் 11. 8, 9, 10

**ஆண்டவர் வருகைக்காக ஆபிரகாம் கூடாரங்களிலே குடியிருந்து காத்திருந்தான். எவ்வளவு பெரியதொரு விசுவாசம். பரிசுத்த வேதத்தில் முதன் முதலாவதாக எழதப்பட்ட யோபு என்ற புத்தகத்திலே சொல்லப்பட்ட யோபு என்ற தீர்க்கதரிசிக்கு துன்பங்களும் துயரங்களும் வந்தபோதிலும், அவனுக்கு ஒரு விசேஷமான நம்பிக்கை இருந்தது.** என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்து போகிறது. யோபு 19. 25, 26, 27




**அந்த யோபுடைய ஜீவியத்திலே எவ்வளவு ஆழமான அவருடைய வருகையை பற்றின ஒரு நிச்சயம் இருந்தது. அவனுக்கு பெரிய துன்பங்ளும் கஷ்டங்களும் வந்தும் அவனுடைய வாஞ்சை அவனை விட்டு விலகவில்லை. சங்கீதக்காரன் சொல்லுகிறான்** நம்முடைய தேவன் வருவார், மவுனமாயிரார், அவருக்கு முன் அக்கினி பட்சிக்கும்; அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார். சங்கீதம் 50. 3, 4 **ஆகவே அநேகர் அவர் வராமல் இருக்கிறதை நினைத்து சோர்ந்துபோகிறதனாலே**

5

**இங்கு சங்கீதக்காரன் அவர் வருவார் என்று ஒரு பெரிய நம்பிக்கையை நமக்கு கொடுக்கிறார்.** அவர் மரணத்தை ஜெயமாய் விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார். அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய ரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும். **ஏசாயா 25. 8, 9**




வானத்தின்மேல் வருகிற அந்த ஆண்டவரை பார்த்து இவரே எங்கள் தேவன், இவருக்காக காத்திருந்தோம் என்று பெரும் நம்பிக்கையோடு சொல்லுகிறார் ஏசாயா. வேத புத்தகத்திலே ஒவ்வொரு பக்கத்திலும் ஆண்டவருடைய வருகையை குறித்து ஏராளமாக எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய வருகையை குறித்து மிக முக்கியப்படுத்தி பேசுகிறது. சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், என் பரிசுத்த பர்வதத்திலே எச்சரிப்பின் சத்தமிடுங்கள்; தேசத்தின்குடிகள் எல்லாம் தத்தளிக்கக்கடவர்கள்; ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது, அது சமீபமாயிருக்கிறது -யோவேல் 2. 1






**செப்பனியா என்ற தீர்க்கதரிசி கர்த்தருடைய நாளை பற்றி விசேஷமாக பேசுகிறார்.** கர்த்தராகிய ஆண்டவருக்கு முன்பாக மௌனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது; கர்த்தர் ஒரு யாகத்தை ஆயத்தம்பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார். செப்பனியா 1. 7 **அடுத்து சகரியா சொல்லுகிறார்** அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும். சகரியா 14. 4. **மற்றும் மல்கியா புத்தகத்திலே** இதோ, சூளையைப்போல எரிகிறநாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். மல்கியா 4. 1




**ஆண்டவர் வரும்போது இந்த உலகம் எரிந்துபோகும் என்று வேதம் சொல்லுகிறது. அந்த நாள் மிக சீக்கீரமாக வரபோகிறது. ஆகவே பழைய ஏற்பாட்டு காலத்திலே நம்முடைய முற்பிதாக்களாகிய தீர்க்கதரிகள் அனைவரும் ஆண்டவருடைய வருகையை விசுவாசித்து அந்த இரண்டாம் வருகைக்காக காத்திருந்த மக்களாக இருந்தார்கள். புதிய ஏற்பாட்டிலே 318 முறை ஆண்டவருடைய வருகையை குறித்து பேசப்பட்டிருக்கிறது.** இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார். 2 தீமோ 4. 8 **இந்த உலகத்தின் மக்கள் பரலோகத்திலே கிரீடம் அணிந்தவர்களாக இருப்போம். நம்முடைய ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு கிரீடம் கொடுப்பார்.** ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். 1 தெச 4. 16



**எக்காள சத்ததோடும் கோடான கோடி தேவ துாதர்களோடும் ஆண்டவர் இந்த உலகத்திற்கு வருவார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் நிச்சயமாக திட்டவட்டமாக எழுதியிருக்கிறார்.**




**பேதுரு தன்னுடைய புத்தகத்திலே எழுதும்போது** கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளு மெரிந்து அழிந்துபோம். 2 பேதுரு 3. 10




**மற்றும் யாக்கோபு என்ன சொல்லுகிறார்** நீங்களும் நீடிய



பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. யாக்கோபு 5. 8 **யோவான் நம்முடைய வேதத்தை முடிக்கும்போது சொல்லுகிறார்** இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர் மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். வெளி. 22. 20




**நம்முடைய அப்போஸ்தலர்கள் ஆண்டவருடைய வருகையை எவ்வளவாய் விசுவாசித்தார்கள். இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கு எழும்பிபோனபோது சீஷர்கள் அவர் எழும்பிபோவதை பார்த்துகொண்டிருக்கையில் , அங்கு இரண்டு தேவதுாதர்கள் வந்து** கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். அப்போஸ்தலர் 1. 11 **இங்கு தேவதுாதர்களின் நம்பிக்கையை பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவும் தன்னுடைய வருகையை குறித்து திட்டவட்டமாக சொன்னார்.** அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். -மத்தேயு 24. 30



**இங்கு ஆண்டவரே தன்னுடைய வருகையை பற்றி விசேஷவிதமாக சொல்லுகிறார்.** இயேசுவோ பேசாமலிருந்தார். அப்பொழுது, பிரதான ஆசாரியன்

அவரை நோக்கி: நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன்பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான். அதற்கு இயேசு: நீர் ெ சான்னபடிதான்; அன்றியும் மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் இதுமுதல் காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். - மத்தேயு 26.63,64 **ஆண்டவர் திரும்பவும் தன்னுடைய வருகையை பற்றி சொல்லுகிறார். கர்த்தருக்குள் பிரியமானவர்களே! வேதம் முழவதிலும் பழைய ஏற்பாட்டு காலத்திலே முற்பிதாக்களும் பல தீர்க்கதரிசிகளும் ஆண்டவருடைய வருகையை குறித்து பேசினார்கள். அப்போஸ்தலர்களும் ஆண்டவருடைய வருகையை குறித்து பேசினார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய வருகையை குறித்து பேசினார். இவ்வளவு நிச்சயமாக இங்கு வேதத்தில் திரும்ப திரும்ப பேசப்படுவதன் நோக்கமென்ன? சற்று சிந்திப்போமா? அப்போஸ்தலர்களுக்கு பிறகு பெரிய மனிதர்களில் லூதர் சாஸ்திரியார் சொல்லுகிறார்: ஆண்டவருடைய வருகைக்காக நான் ஆவலோடு எதிர்ப்பார்க்கிறேன், அவருடைய வருகை 300 வருடத்திற்குள்ளாக நிச்சயமாக இருக்கும் என்று எழுதி வைத்திருக்கிறார். ஜான் வெஸ்லி என்ற பிரசங்கியார் சொல்லுகையில்: ஆண்டவரே நீர் சீக்கிரமாக வந்து உம்முடைய பிள்ளைகளை பரலோகத்திற்கு அழைத்துசெல்லும் என்று சொன்னார். இந்த உலகத்தில் தேவனுடைய பிள்ளைகள் எல்லோருமே ஆண்டவருடைய வருகையை குறித்து பேசினார்கள். இப்பொழுதும் அநேக ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஆண்டவருடைய வருகையை குறித்து பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். இப்படி நாம் எதிப்பார்த்துகொண்டிருக்கையில் அவர் எப்படி வருவார் என்ற ஒரு கேள்வி நம் உள்ளத்தில் இருக்கிறது. பிறகு என்ன நடக்கும்?** அப் பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப் பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் மத்தேயு 24.30 **அவர் வருவதை யாவரும் காண்பார்கள். அவர் வருவதை கண்டு யாவரும் புலம்புவார்கள். கர்த்தருக்காக காத்திருந்த மக்கள் இதோ இவருக்காக காத்திருந்தோம் என்று ஆர்ப்பரிப்பார்கள்.**






**ஆனால் பாவிகளோ அவருடைய வருகையை கண்டு புலம்வார்கள். அவர்கள் ஆயத்தமாக என்றுமே இருந்ததில்லை. பரலோகத்தின் வாஞ்சை அவர்களிடத்தில் இருந்ததில்லை .அவருடைய வசனத்தை கேட்டும் அசட்டையாக இருந்தனர், அதனால் அன்று அவர்கள் புலம்புவார்கள்.** வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் ெ காள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள். வெளி 6.14,15,16,17




இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும் ஆமென். வெளி 1.7 **இங்கு ஆமென் என்று சொல்லப்படும்போது அது அப்படியே ஆகும் என்று அர்த்தமாகிறது. அப்படி அவர் மேகங்களுடனே வரும்போது மிகவும் மகிமை பொருந்தினவராய் வருவார். அவருடைய ஒரு தேவதூதனின் மகிமையை குறித்து வேதம் சொல்லுகிறது** அப் பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தான். அவனுடைய ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த



மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது. காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள். மத் 28.2,3,4 **ஒரு தேவதூதனின் மகிமை இப்படியிருந்தால் ஆயிரக்கணக்கான தூதர்கள் வந்தால் இந்த பூமி என்னாவது?** பின்னும் நான் பார்த்தாவது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது. வெளி 5.11 **இப்படிதான் ஆண்டவருடைய வருகை அவ்வளவு பிரகாசமாயிருக்கும். இப்படி அவர் வரும்போது எல்லா கண்களும் அவரை பார்க்கும் என்று வேதம் சொல்லுகிறது.** கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளுமெரிந்து அழிந்துபோம். 2 பேதுரு 3.10 **நமக்கு மேலே இருக்கிற அந்த வானங்கள் திடிரென்று அகலும்போது பிரமாண்டமான வெளிச்சம் எழும்பும் என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். ஆகவே அவருடைய வருகையின் நாள் யாருக்கும் தெரியாது. அவர் யாருக்கும் தெரியாத நேரத்திலே வருவார். அவர் வந்து நம்மை அவரோடுகூட அழைத்துபோவார்.** நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார். பிலிப்பியர் 3.20,21 பரலோகத்திற்கு நாம் போகும்போது இப்பொழுது இருக்கிற சரீரத்தை விட அவருக்கொப்பான சரீரத்தோடு போவோம்.





இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.



அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். 1 கொரிந்தியர் 15.51,52,53,54




ஒருவரும் கெட்டு போகாதபடி எல்லோரும் நித்திய ஜீவனை அடைய பிதா தன் குமாரனை இந்த பலியாக கொடுத்தார்.




அந்த பலியினால் அவருடைய அன்பு எப்படிப்பட்டது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.



தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். யோவான் 3. 16, 17




எல்லாவிதமான மதத்திற்கும் ஆண்டவர் கூக்குரலிடுகிறார். காலம் சமீபமாகிவிட்டது, மனந்திரும்புங்கள் என்று அவர் சொல்லுகிறார். நியாயத்தீர்ப்படைய எல்லா கல்லறைகளும் திறக்கப்படும். கொல்கதா மலையிலே சிந்தப்பட்ட இரத்தம் நம் ஒவ்வொருவரையும் கழுவி சுத்திகரிக்க வல்லமையுள்ளது. அந்த பலியின் நிமித்தம் நாம் சுத்திக்கரிக்கப்பட்டு ஆண்டவரோடு செல்ல முழு முழு பெலத்தோடு பிரயாசப்படுவோம். அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடங்கொடாதிருப்பாயாக. தீத்து 2. 14. 15 இதை படிக்கிற ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கு கர்த்தர் பெரும் ஆசீர்வாதத்தை கொடுப்பாராக ஆமென்.

